விற்பனையாகின்றது:
கணிதப்பயிற்சி
ஆண்டு 7
(புதியபாடத் திட்டத்திற்கானது)
வெளியீடு:
ஞானசுரபி
புத்தகக் கம்பனி
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

விற்பனையாகின்றது:
கணிதப்பயிற்சி
ஆண்டு 7
(புதியபாடத் திட்டத்திற்கானது)
வெளியீடு!
ஞானசுரபி
புத்தகக் கம்பனி
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸு சித்திரை மீ 10 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 23 (23-04-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 125

வடமராட்சி, தென்மராட்சியில்

# பொம்மர்களின் குண்டுவீச்சுக்கு 11 அப்பாவிகள் பலி!

## 30 பேர் காயம்; பாடசாலை உட்பட பல வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 23

ஸ்ரீ லங்கா அரசின் பொம்மர் விமானங்கள் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடமராட்சியைச் சேர்ந்த பருத்தித்துறை, மந்திகைப் பகுதிகளிலும், தென்மராட்சியைச் சேர்ந்த சாவகச்சேரியிலும் நேற்று மூர்க்கத்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதல்களில் இரண்டு பாடசாலை மாணவர்கள் உட்பட பதினொரு அப்பாவிப் பொது மக்கள் படுகொலையானார்கள் சுமார் 30 பேர் படுகாயமுற்றனர். ஒரு பாடசாலைக் கட்டடம் உட்பட சுமார் இருபது வீடுகள் சேதமுற்றன.

பருத்தித்துறையில் நேற்றுக் காலையும் நண்பகலும் இரண்டு தடவைகள் நடத்தப்பட்ட மூர்க்கத்தனமான தாக்குதல்களில் 8 பேர் கொல்லப்பட்டனர். 24 பேர் படுகாயமடைந்தனர்.

சாவகச்சேரித் தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

பருத்தித்துறையில் நேற்றுக் காலை 8 40 மணியளவில் ... தம்பாதெருச் சந்தியிலிருந்து விக்னேஸ்வரா ஒழுங்கையிலுள்ள வீடுகளின் மேல் பொம்மர் தாக்குதல்கள் நடந்தன.

இந்தச் சம்பவத்தில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். பத்து வீடுகள் சேதமுற்றன.

இப்பகுதியில் வீசப்பட்ட நான்கு குண்டுகளில் இரண்டு மட்டுமே வெடித்தன.

பருத்தித்துறையில் இரண்டாவது குண்டு வீச்சுத் தாக்குதல் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் நடந்தது.

பொம்மர்களின் குண்டு மழையினால் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை முற்றாகச் சேதமடைந்தது.

இப்பாடசாலையின் காரியாலயம், பிரார்த்தனை மண்டபம், வகுப்பறைகள், தளபாடங்கள் யாவும் முற்றாகச் சேதமுற்றன.

இதே வேளை பருத்தித்துறையில் ஓராங்கட்டையில் உள்ள வீடுகளை நோக்கியும் குண்டுகள் வீசப்பட்டன. இதனால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### விமானத் தாக்குதலில் உயிரிழந்தோர்

யாழ்ப்பாணம், ஏப்:23

நேற்றைய பொம்மர் தாக்குதல்களின்போது உயிரிழந்தவர்களின் விபரம் வருமாறு:-

* பருத்தித்துறையில் உயிரிழந்தவர்கள்:-

1 ஆயுள்வேத வைத்தியர் கே. இராமச்சந்திரா (வயது 59) புலோலி தெற்கு

2 கல்லூரி மாணவன் எஸ். ஜெயக்குமார் (வயது 20) அம்பன் குடத்தனை.

3 வண்டித் தொழிலாளி திரு எஸ். பொன்னையா (வயது 50) ஒடக்கரை, உருத்திராவத்தை.

4 பொற்கொல்லத் தொழிலாளியும் ஆறு பிள்ளைகளின் தந்தையுமான திரு. கே. சண்முகராசா (வயது 60) தும்பளை.

5 மீன் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த திருமதி இராஜேஸ்வரி (வயது 55) இவர் ஒன்பது பிள்ளைகளின் தாயார், கற்கோவளம்.

6 நாலு பிள்ளைகளின் தாயார் திருமதி பழனி (வயது 29) கற்கோவளம்.

7 திரு. சு. தியாகராசா, வயது 70 புலோலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### படுகாயமுற்றோர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

நேற்றைய விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலின்போது படுகாயமடைந்தோர் விவரம் வருமாறு:

* பருத்தித்துறை:-

கு. மனோகரன் (வயது 36) மருதடி, திருமதி. கே. பரமேஸ்வரி (59) புலோலி கிழக்கு, செல்வி எஸ். ரேணுகா (4) மருதடி, திருமதி எஸ். நந்தினி (32) விஸ்வகுல ஒழுங்கை, செல்வி எம் மதுரம் தேவி (7) மருதடி, திருமதி ஆர். சாந்திமதி (55) புலோலி கிழக்கு, திருமதி ஆர். பாக்கியம் (65) புலோலி கிழக்கு, செல்வி ரி. கவிதா (9) புலோலி கிழக்கு, கே. முருகேசு (70) மூன்றாம் குறுக்குத் தெரு, எஸ் திருநாவுக்கரசு (38) புலோலி கிழக்கு, கா. சந்திரன் (29) வியாபாரி மூலை, செல்வி மா. சுகிர்தா (8) பருத்தித்துறை.

தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றோர் விபரம்:

திருமதி. மு. சுமத்திரா தேவி (35), திருமதி மு. மாலதி (25), யோ. ஜலஜா (7) மூவரும் பருத்தித்துறை, என்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்தில் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம் ஏப் 23

யாழ்ப்பாணத்தில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

புதன்கிழமை இரவு காங்கேசன்துறை மினி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஐந்து விடுதலைப் புலிகள் வீர மரணமடைந்தனர்.

இவர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக நகரெங்கும் கறுப்புக் கொடிகளும் வாழைகளும் கட்டப்பட்டிருந்தன

வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன.

கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. (இ-10)

### திருமலையில் ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு, ஏப். 23

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று பிற்பகல் 4 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இன்று வியாழன் காலை 6 மணியுடன் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும். (எ)

### மேதின கொண்டாட்டம் ரத்து

கொழும்பு, ஏப். 23

கொழும்பு மாநகரில் இம்முறை மேதினக் கொண்டாட்டங்கள் இல்லை.

பொதுமக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைக் கூட்ட முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### மக்களே கவனம்!

## குடாநாட்டிலே குண்டு வீச்சுத் தொடரும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

குடாநாட்டு மக்களே, கவனம்! எச்சரிக்கையாக இருங்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிக் கொள்ளுங்கள்.

வெளியூர்ப் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் தொடரும் வரை குடாநாட்டில் போராளிகளின் முகாம்கள் மீது தாக்குதல்கள் நடத்தப் படும்.-

ஆகையால் தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ் இயக்கங்களின் முகாம்களுக்கு அருகில் உள்ள பொதுமக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டும் - என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது.

போராளிகள் முகாம்களைத் தாக்குவதாகக் கூறிக் கொண்டு இதுவரை பொது மக்களின் குடியிருப்புகள் தாக்கப்பட்டது உங்களுக்கு கிடைத்த அனுபவம்.

போராளிகள் முகாம் இருந்ததாகத் தகவல் கிடைத்துத் தாக்கினாலும் என்ற பேரில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹாமர்வியூ மினிமுகாம் தாக்குதல் குறித்து பிரபாகரன் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 23

தமிழீழத்தின் மீது ஸ்ரீ லங்கா அரசு நடத்தும் இன ஒழிப்புப் போராட்டத்தின் முற்றுப் புள்ளிக்காகத் தொடங்கப்பட்ட புதிய வரலாற்றுச் சாதனைகள் வெற்றியை நோக்கி வேகமாக முன்னேறி வருகின்றன.

காங்கேசன்துறை ஹாமர்வியூ மினி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஓர் புதிய அத்தியாயத்தின் வரலாற்றுச் சாதனைகள் தொடர்கின்றன' என்ற தலைப்பில் வெளியான இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

கடந்த ஒரு மாதத்தில் மூன்றாவது மாபெரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இந்தியா கவலை கண்டனம்

புதுடில்லி, ஏப் 23

புறக்கோட்டை பஸ் நிலையப் படுகொலை குறித்து இந்தியா ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருக்கிறது

இச்செயல் மூர்க்கத்தனமானது. விவேகமற்றது. இச்செயலை இந்தியா ஐயத்துக்கு இடமின்றி வன்மையாகக் கண்டிக்கிறது.

இப்படி இந்தியவெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார், (இ-எ)

### நாவற்குழி முகாமிலிருந்தும் ஷெல்தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 23

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்தும் நேற்று ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக இரண்டு பேர் காயம் அடைந்தனர். கடை ஒன்று சேதமடைந்தது.

நேற்று மாலை நான்கு மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஒரு ஷெல் கைதடி கோப்பாய் வீதியில் உள்ள வைரவர் ஆலயத்துக்கு அருகில் விழுந்து வெடித்தது.

அப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் நின்ற இருவர் காயம் அடைந்தனர்.

பிதாம்பரம் ரவிக்குமார் (வயது 21) இரத்தினம் சிவராசா (வயது 18) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் கைதடி வாசிகள். (இ-10)

### சுபநேரம்

23-04-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:-
7-30 முதல் 9-00 வரை
ராகுகாலம்:-
1-30 முதல் 3-00 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திருநாவுக்கரசர் குருபூஜை

### நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

கொழும்பு, ஏப். 23

நாடாளுமன்றம் இன்று வியாழன் கூடுகின்றது.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது

நாட்டு நிலைமை குறித்து விவாதிக்க கூடுதல் நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இருவர் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்பது தெரிந்ததே. (இ-எ)

## இறந்தவர் இதுவரை 104 பேர்

கொழும்பு, ஏப். 23

செவ்வாய்க்கிழமை மாலை நடந்த புறக்கோட்டை குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை 104 என அரசு நேற்று அறிவித்தது

இந்த எண்ணிக்கை மேலும் உயரலாம் எனவும் அறிவிக்கப்பட்டது.

காயப்பட்டோர் எண்ணிக்கை 288 என்றும் அவர்களில் சுமார் 100 பேர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொழும்பு கம்பஹா மாவட்டங்களில் அமுலில் உள்ள ஊரடங்கு இன்று காலை 5 மணிக்குத் தளர்த்தப்படும். எனினும் மீண்டும் காலை 9 மணி தொடக்கம் நாளை வெள்ளிக்கிழமை காலை 5 மணி வரை ஊரடங்கு அமுல் செய்யப்படும். (அ)

# வெலிக்கடைத் தமிழ் கைதிகள் அடித்துக் கொலை!

## சிறை அதிகாரிகள் தடுத்ததால் எண்ணிக்கை உயரவில்லை

கொழும்பு, ஏப்ரல் 23

வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஆறு தமிழ்க் கைதிகளை சிங்களக் கைதிகள் நேற்றுக் காலை அடித்துக் கொலை செய்தனர் என அறிவிக்கப்படுகிறது

சிறை அதிகாரிகள் தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்து தடுத்ததால் கொலை செய்யப்பட்டோர் எண்ணிக்கை உயராதிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

வெலிக்கடைச் சிறைச் சம்பவம் தொடர்பாக முரண்பட்ட செய்திகள் கிடைத்தன.

வெளிநாட்டு வானொலிச் செய்திகள் வெவ்வேறு விதமாக இருந்த போதிலும் கொலை முயற்சிச் சம்பவம் குறித்து அறிவித்தன.

ஆனால் இலங்கை வானொலியோ அல்லது தொலைக்காட்சியோ இச் செய்தி எழுதப்படும் வரை எதுவும் அறிவிக்கவில்லை.

வெளிநாட்டு வானொலி பின்வருமாறு அறிவித்தது:-

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் வைக்கப்பட்டிருந்த கூண்டுக்குள் சிங்களக் கைதிகள் சுவரை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைய முயற்சித்தனர்.

சிறை அதிகாரிகள் தடியடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் முதலியவற்றை நடத்தி சிங்களக் கைதிகளை தடை செய்ய முயற்சித்தனர்.

அதே நேரத்தில் அங்கு வைக்கப்பட்டிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### குண்டு வெடிப்பில் 18 வாகனங்கள் சேதமடைந்தன

கொழும்பு, ஏப் 23

கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 8 வான்கள், 6 மோட்டார் சைக்கிள்கள், 4 கார்கள் முற்றாகச் சேதமடைந்தன. (இ-எ)

### அரசு அறிக்கை

கொழும்பு, ஏப் 23

அத்தளாய், புறக்கோட்டைப் படுகொலைகள் குறித்து ஆத்திரமுற்றுச் செயல்பட்டால் ஈழம் என்ற தனிராஜ்யம் அமைக்கும் முயற்சிக்கு உதவுவதாகவே முடியும்.

இப்படி இலங்கை அரசு விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. (இ-எ)

## அமைச்சரவை தீர்மானங்கள்

கொழும்பு, ஏப். 23

சிங்களப் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் தொடருமானால் தமிழீழ விடுதலைப்புலிகள், ஈரோஸ் ஆகியவற்றின் தளங்கள் மீதான விமானத் தாக்குதல்களும் தொடர்ந்து நடத்தப்படும்.

இப்படி அமைச்சரவை தீர்மானித்தது

நேற்றுக் கூடிய அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு;-

* தீவிரவாதத்தையும், தீவிரவாதிகளையும் அழித்து விடுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவது.

* படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது.

* கொழும்பு மாநகரின் முக்கிய இடங்களில் படை முகாம்களை நிறுவுவது: (இ-எ)

## நேற்று அதிகாலை ஹெலி திடீர் தாக்குதல்

### உறக்கத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஏப் 23

நேற்று புதன்கிழமை அதிகாலை சண்டிக்குளி நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில் ஹெலிக்கொப்டரில் இருந்து 50 கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக நல்லூரில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

அதிகாலை 5-40 மணியளவில் திடீரென வந்து சுட ஆரம்பித்தது.

பீதிகொண்ட மக்கள் உறக்கத்தில் இருந்து எழுந்து ஆலயங்களை நோக்கி ஓடினர்.

நல்லூர் சங்கிலியன் வீதியில் உறக்கத்தில் இருந்த சிதம்பரப்பிள்ளை நடராசா (வயது 74) ஹெலிக்கொப்டர் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

இதேவேளை அதிகாலை நேரம் யாழ் கோட்டை முகாமில் இருந்தும் ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன. (இ-10)

## தொழிற்சாலை ஊழியர் ஐவர் பிணமாக மீட்பு

பலாலி, ஏப். 23

காங்கேசன் துறைத் துறைமுக மினி இராணுவ முகாம் தாக்குதலின்போது துறைமுகப் பகுதியில் கடமையில் இருந்த லங்கா சீமெந்து தொழிற்சாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர், ஏனைய தர ஊழியர்கள், ஏற்றி இறக்கும் தொழிலாளர்களான எண்பத்தி ஐந்து (85) பேரில் ஐந்துபேர் பிணமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளனர். 78 பேர் உயிருடன் திரும்பினர்.

ஒருவர் இராணுவத்தால் தடிதடிக்கச் சுட்டுக்கொல்லப்பட்டு தடல் எரிக்கப்பட்டார்.

மேலும் ஒருவரது நிலை தெரியவில்லை.

மினி முகாம் தாக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு இன்று காலை நீக்கப்படும்

கொழும்பு, ஏப் 23

நேற்றுக் காலை 9 மணிக்கு கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று வியாழன் காலை 5 மணிக்கு நீக்கப்படும். (இ-எ)

முச்சந்தி ஒளி



அப்ப போராளிகள் முகாம்களைத் தாக்கிற தாகக் கூறி தமிழரை அழிக்க ''ஒப்பின் லைசென்ஸ்'' வழங்கியாச்சு! இனி என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

